231--

போச்சம்பள்ளியிலுள்ள சூரியகாந்தி எண்ணெய் ஆலையை நவீனமயமாக்கி விரிவுபடுத்தும் திட்டம்

***24679-திரு கா. பூ. முனுசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா---

(அ) போச்சம்பள்ளியிலுள்ள சூரியகாந்தி எண்ணெய் ஆலையை நவீனமயமாக்கி விரிவுபடுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசாணை எண் 262, வேளாண்மை, நாள் 11-5-92-ல் மேற்கண்ட ஆலையை நவீனப்படுத்த ரூ. 25 இலட்சம் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையில் உற்பத்தியாகின்ற சனோலா என்ற பெயரைக் கொண்ட எண்ணெய் பல பெரிய நிறுவனங்கள் முயற்சி செய்தும் கூட இந்த எண்ணெயினுடைய விற்பனையை மிஞ்சுவதில் அவர்கள் தோற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஆலையிலே உற்பத்தியாகின்ற எண்ணெய் ஒரு தரம் வாய்ந்த எண்ணெயாக இருக்கின்ற காரணத்தினால் நிறைய கடைகளிலே கேட்கின்றபோது இல்லை என்றே பதில் வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அனுமதியோடு 25 இலட்சம் ரூபாயைச் செலவு செய்து ஆலையை விரிவுபடுத்த இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை இந்த ஆண்டிலேயே முடிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தர்மபுரி மாவட்டத்திலே உள்ள

1994 ஏப்ரல் 8]

போச்சம்பள்ளியில் அமைந்துள்ள இந்த சூரியகாந்தி எண்ணெய் பிழியும் ஆலை 1978 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. அதனுடைய அரவைத் திறன் ஒரு நாளைக்கு 50 டன் என்றும், சுத்திகரிக்கக்கூடிய திறன் ஒரு நாளைக்கு 20 டன் என்றும், எண்ணெய் படிதல் ஒரு நாளைக்கு 40 டன் என்றும், குறியிடப்பட்டு ரூபாய் 1 கோடி 34 இலட்சத்தில் இந்த ஆலை துவக்கப்பட்டது. நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையின் வாயிலாக அவர்கள் பெரும் கருணை உள்ளத்தோடு இந்த ஆலையை நவீனப் படுத்துவதற்காக ரூ. 25 இலட்சம் வழங்கியதினாலே 1978லே 460 டன்னோடு துவக்கப்பட்ட ஆலை இந்த ஆண்டு தான் 7,000 டன் விதைகளை அரைத்து எண்ணெய் பிழியக்கூடிய சாதனைனை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையினுடைய மூலப்பொருளாகிய சூரியகாந்தி நமது மாநிலத்திலே சிறிய அளவிலே விளைகின்ற காரணத்தினாலும் வெளி மாநிலங்களிலே, குறிப்பாக வட மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்கின்ற காரணத்தினாலும் அதிகப்படியான விலை கொடுத்து வாங்கக்கூடிய ஒரு சூழ்நிலை உள்ளது. எனவே, ஆலையை விரிவுபடுத்துகின்ற அதே நேரத்தில் மூலப்பொருளான சூரியகாந்தியை பெருக்குகின்ற திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எந்த ஒரு திட்டத்தை அறிவிக்கின்றபோதும், துவங்குகின்றபோதும் தீவிர சிந்தனையோடு, தீர்க்க தரிசன உணர்வோடு, தொலைநோக்குப் பார்வையோடுதான் ஒரு திட்டத்தைச் செயல்படுத்துகிறார்கள். 25 இலட்சம் ரூபாய் இந்த ஆலையை விரிவுபடுத்துகின்ற திட்டத்திற்கு நிதி வழங்குகின்ற அதே நேரத்திலே இந்த ஆலைக்குத் தேவையான சூரியகாந்தி விதைகள் அண்டை மாநிலமான கர்நாடக மாநிலத்திலிருந்து அதிக அளவிலே கொள்முதல் செய்யப்பட்டு அரைக்கப்பட்டது. அந்த நிலை தவிர்க்கப்படவேண்டும் என்பதற்காக தமிழகத்திலே அதிக அளவில் சூரியகாந்தி பயிரிடவேண்டும் என்ற உயரிய கருத்துக்களோடு இந்திய துணைக் கண்டத்திலே முதன் முதலாக ஒட்டு விதைகளையே தமிழகத்தில் பயிரிடவேண்டுமென்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை

வழங்கியிருக்கிறார்கள். நிதியும் தந்து இருக்கிறார்கள். அரசும் ஆவன செய்திருக்கிறது. எனவே, இந்த ஆண்டு சூரியகாந்தி பயிரிடக்கூடிய பரப்பளவு அதிகமாகக் கூடியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 232, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

232--

அரசு சார்பில் "ரோபாட்" தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்

***16394--திரு. ஆர். பி. பரமசிவம்:**

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் அரசு சார்பில் "ரோபாட்" தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யும் தொழிலே தெய்வம் என்ற உணர்வு உணர்வுபூர்வமாக தொழில் அதிபர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் மத்தியில் நிலைத்து நின்றிட ஆக்கபூர்வமான ஆலோசனைகளை, நடவடிக்கைகளை எடுத்து வருகின்ற இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் ஏற்கெனவே நல்ல முறையில் நடந்து வரும் பெரிய தொழிற்சாலைகளில் ரோபாட் என்ற இயந்திர மனித தொழிலாளியை பரிட்சார்த்தமான முறையில் பயன்படுத்த அரசு உத்தேசிக்குமா? அப்படி இல்லையென்றால் தொழிற்சாலைகளில் தொழிலுக்கு ஏற்றவாறு வெளிநாடுகளிலிருந்து அந்த ரோபாட் என்ற இயந்திரத்தை பயன்படுத்துகின்ற வகையில் அரசு தருவித்து பயன்படுத்த ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.